**செய்தி வெளியீடு எண்: 349** **நாள்:30.06.2021**

**செய்தி வெளியீடு**

**நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற 3 உயர் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்படும்!**

**நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் "தரமே நிரந்தரம்– இதுவே தாரக மந்திரம்" என்பதை நினைவில் வைத்து பணியாற்றிட வேண்டும்!**

**நெடுஞ்சாலை ஒப்பந்ததாரர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் வேண்டுகோள்!**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின்** அறிவுரைப்படி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் இன்று **(30.06.2021)** சென்னை கிண்டியிலுள்ள நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி மைய வளாகத்தில் நெடுஞ்சாலைத் துறையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தேசிய நெடுஞ்சாலை, நபார்டு மற்றும் கிராம சாலைகள், திட்டங்கள், பெருநகரம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –II, சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னை எல்லைச் சாலை போன்ற பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்ததாரர்களுடன் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைகள் மற்றும் பாலங்கள் பணிகள் தொடர்பாகவும், சாலைகள் தரமானதாகவும், விரைந்து முடித்திட அறிவுறுத்தியும் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து பேசும்போது குறிப்பிட்டதாவது,

- கி.மு.4ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மௌரியப் பேரரசு காலத்தில் தான் சாலைகளை "ராஜபாட்டை" என்றும் "பஞ்சபாதை" என்றும் பிரித்து அழைத்துள்ளார்கள். இமயம் முதல்

குமரி வரை உள்ள வழிபாட்டு தலங்கள் இணைக்க தான் அந்த காலத்தில் அரசர்கள் பாதையை அமைந்துள்ளனர்.

- தென்னகத்தை பொறுத்தமட்டில், உஜ்ஜெயினியிலிருந்து காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், மதுரை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற ஆன்மீக நகரத்தை இணைத்து பாதைகள் அமைத்துள்ளனர். அதற்கு பின் ஆங்கிலேயர் ஆட்சியில் தான் 1785ம் ஆண்டு தான் இம்பீரியல் சாலைகள் என்றும் டிரங்ரோடு என்றும் பிரதான சாலைகளை அமைக்க தொடங்கினார்கள். 1927ம் ஆண்டு நியமித்த M.R ஜெய்கர் கமிட்டி பரிந்துரையில் I.R.C இந்திய சாலை கழகம் உருவாக்கப்பட்டது.
- 1933ம் ஆண்டு ஏ.விப்பன் கமிட்டி பரிந்துரைகளை பெற்று சாலைகளின் வகைப்பாடுகள் உருவாக்கப்பட்டது. 1943–H.R.டோக்ரா தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் பரிந்துரை பெற்று இன்றைய நெடுஞ்சாலை துறை உருவாக்கப்பட்டது. 1845ல் சென்னை ராஜதானியில், சென்னை–விழுப்புரம்–திருச்சி–திண்டுக்கல் சாலையும், சென்னை – வேலூர் –தர்மபுரி–சேலம்–கொச்சின் சாலையும் அமைக்கப்பட்டது. இந்தியாவில் நிலத்தின் தரமும் தட்ப வெட்ப நிலை மாறுபாடாக உள்ளதால் அந்தந்த பகுதிக்கு தக்கவாறு ஆய்வகம் அமைக்கப்பட்டது. 1954ம் ஆண்டு சென்னையில் P.ராமசாமி ரெட்டியார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் "நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்" தொடங்கப்பட்டது. அதனால் தான் தற்பொழுது தரமான சாலைகள் அமைக்கப்படுகிறது.

<u>சாலைகள் மனித நாகரீகத்தின் முக்கிய பங்கு</u>

- மனித நாகரீகத்திலும் பொருளாதார வளர்ச்சியாலும் முக்கிய பங்கு வகிக்கும் சாலைகளை கட்டமைத்து தரும் ஒப்பந்தக்காரர்களாகிய உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி. 1752ம் ஆண்டில் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து செயிண்ட் தாமஸ் மலை வரை உள்ள மவுண்ட் ரோடு அமைக்கப்பட்டது. முதன் முதலாக கருங்கல் ஜல்லியுடன் கிராவல் சேர்த்து (WBM –Water Bound Macadam) கப்பி சாலையாக இந்த அமைக்கப்பட்டது.

- அரசாங்கத்தாலேயே துறை மூலமாகவே செய்யப்பட்டு வந்த வேலைகளை ஒப்பந்தக்காரர் மூலம் செயலாக்கலாம் என்ற அடிப்படையில் முதன் முதலாக 1860ம் ஆண்டு நெல்லையில் நம்பி ஆற்றின் மீது தளபதி சமுத்திரம் அருகில் பாலம் ஒன்று ஒப்பந்தக்காரர் மூலம் கட்டப்பட்டது. 1882 ல் எல்பின்ஸ்டன் என்ற கவர்னர் கோட்டையிலிருந்து அடையாறு வரை சாலை அமைத்து அடையாற்றின் குறுக்கே பாலம் கட்டினார். அது அவர்பெயரிலேயே எல்பின்ஸ்டன் பாலம் என்று அழைக்கப்பட்டது. 1918ல் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் துாரத்திற்கு தென்னகத்திலேயே முதன் முதலாக சிமெண்ட் சாலை (CC Road) அமைக்கப்பட்டது.

<u>நெடுஞ்சாலைத் துறை உருவாக்கம்</u>

- 01.04.1946ல் நெடுஞ்சாலைத்துறை உருவாக்கப்பட்டது. அண்ணா மேம்பாலம் 01.07.1973ல் ரூ.49.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1973–ல் நெல்லையில் ரூ.47 லட்சத்தில் ஈரடுக்கு மேம்பாலம் கட்டப்பட்டது. கோவையில் 10.01.1974ல் மூன்றடுக்கு மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பாம்பன் கடல் மீது ரூ.18 கோடி மதிப்பில் பாம்பன் மேம்பாலத்தை கட்டியது முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் தான்.

<u>உலக தரம் வாய்ந்த சாலைகளை அடித்தளம் இட்டவர் கலைஞர்</u>

- 09.05.1997ல் கலைஞர் அவர்கள், மத்திய சுடுகலவை இயந்திரம், அதிர்வு உருளை, மற்றும் பேவர் போன்ற இயந்திரங்களை பயன்படுத்தி உலகத்தரம் வாய்ந்த சாலைகளை அமைக்கும் பணிகளை தமிழகத்தில் செயல்படுத்திட ஆணைப் பிறப்பித்தார். அந்த வகையில் தமிழகம் முழுவதும் அதி நவீன இயந்திரங்களை பயன்படுத்தி சாலைகளை அமைக்கும் ஒப்பந்தக்காரர்களையும், மற்றும் அனைத்து ஒப்பந்தக்காரர்களையும் இங்கு சந்தித்து கலந்துரையாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

- நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் ''**தரமே நிரந்தரம்– இதுவே தாரக மந்திரம்**'' என்பதை நினைவில் வைத்து பணிகளை செய்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை இயக்குநர் திரு.ஆர்.கோதண்டராமன் அவர்கள், தலைமைப்பொறியாளர்கள் திருமதி.ந.சாந்தி, பி.சந்திரசேகர், எம்.முருகேசன், திருமதி.எம்.சுமதி, எம்.கே.செல்வன்,ஆர்.கீதா, எம்.விஜயா, என்.பால்முருகன், பி.ஆ.குமார், ஒய்.ஆர்.பாலாஜி மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**பின்னர் செய்தியாளர்களிடம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் பேசும் பொழுது:–**

'' நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நெடுஞ்சாலைத்துறையின் பங்கு மிகவும் அதிகம். சாலை மற்றும் பாலங்களை கட்டும் பொழுது சில இடங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்கான காரணம் என்ன ? பணி செய்யும் பொழுது ஏற்படும் சங்கடங்கள் என்ன ? என்பதை ஒப்பந்ததாரர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டோம். மணல் கிடைப்பதில்லை, எம்.சாண்ட் பயன்படுத்த வேண்டும் என்றால் திட்ட மதிப்பீட்டை திருத்த வேண்டும், சென்னையில் நெடுஞ்சாலை பணிகளை செய்திட காவல்துறையின் அனுமதி பெற வேண்டும், காலதாமதத்தை தவிர்க்க துறையே அனுமதி பெற்று தர வேண்டும், ஒப்பந்ததாரர் உரிமம் புதுப்பித்தலில் உள்ள சில பிரச்சினைகளை சரி செய்ய வேண்டும், தார் மற்றும் சிமெண்ட் விலையேற்றம், பணி துவங்கும் பொழுது ஒரு விலை, முடிக்கும் பொழுது ஒரு விலை, இடையுள்ள வித்தியாசத்தை குறைக்க வேண்டும் என கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

மேலும், டெல்டா மாவட்டங்களில் கட்டுமான பொருட்கள் கிடைப்பதில்லை. கரூர் போன்ற வெளி மாவட்டங்களில் இருந்து எடுத்து வருவதால் போக்குவரத்து செலவு கூடுகிறது. டெல்டா மாவட்டத்தில் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யும் முன்பு கண்காணிப்பு பொறியாளர்

நிலையில் கள ஆய்வு செய்து பின்னர் மதிப்பீடு தயாரிக்க வேண்டும். நிலம் கையகப்படுத்துவதில் காலதாமத்தை போக்க நெடுஞ்சாலை துறைக்கு தனியாக மாவட்ட வருவாய் அலுவலரை நியமிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். தெரிவிக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றுவோம். ஒப்பந்ததாரர்களின் கோரிக்கையை நிறைவேற்ற 3 உயர் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்படும்.

நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்யும் பொழுது வெட்டப்படும் மரங்களுக்கு பதிலாக புதிய மரக் கன்றுகள் நட்டு அதை பராமரிக்க முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது சுங்கச் சாவடி குறித்து துறை அலுவலர்கள் அறிக்கை தயார் செய்து தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி நல்ல முடிவு எடுக்கப்படும்.

கிராம பகுதிகளில் சாலைகளை செம்மைபடுத்திடும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள 10,000 கி.மீ ஊரகச் சாலைகளை ஒப்படைக்க கோரியுள்ளோம். சாலைகளை ஒப்படைத்ததும் அதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து தரமான சாலைகள் போடப்படும். மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரை 5 முக்கிய சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைத்திட மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனக் கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**